உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை
Monthly Journal of Sivapoomi

சிவம்~06 | விசுவாசுவ வருடம் ஆனித் திங்கள் ஆனி ~2025 | பூமி~06



## பாடசாலைகளில் இணை பாடவிதான செயற்பாடுகளை ஊக்குவிக்க வேண்டும்

பாடசாலைகள் தோறும் இணைபாடவிதான செயற்பாடுகளில் நல்ல மன்றங்கள் செய்யப்பட வேண்டும். தமிழ் மன்றம், இந்து மன்றம், கவின் கலை மன்றம், சாரணியம் மற்றும் விளையாட்டு துறை சார்ந்த பல்வேறு கழகங்கள் மன்றங்கள் செயற்படுவது மாணவர்களின் எதிர்கால வாழ்விற்கு பெரும் பயன் தரும். குறிப்பாக யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் 65க்கு மேற்பட்ட இணை பாடவிதான செயல்பாட்டிற்குரிய கழகங்கள் உருவாக்கப்பட்டிருப்பது

ஆசிரியர்
கலாநிதி. செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன்

உதவி ஆசிரியர்
திரு. ச. சந்தோஷன்

பெருமைக்குரிய மிகவும் முன்னுதாரணமான செயற்பாடு ஆகும். ஏனைய பாடசாலைகளும் இந்த விடயங்களில் அக்கறை எடுத்தல் வேண்டும்.

பாடசாலைகளில் இப்போது ஒலி ஒளி ஆவணப்படுத்தல் பணி பல பாடசாலைகளில் தொடங்கி இருக்கிறார்கள் இதுவும் பாராட்டுக்குரியது. பாடசாலை நிகழ்ச்சிகளை ஆவணப்படுத்துவதில் மாணவர்கள் ஈடுபடுவது என்பது ஒரு சிறப்புக்குரியது. தமது நிகழ்வுகளை தாமே ஆவணமாக்குவது மாணவர்களுக்கான பல்வேறு திறமைகளை வளர்ப்பதற்கு ஆரம்பப் புள்ளியாக அமையும்.

எதுவாக இருந்தாலும் பாடசாலைகளில் தமிழ் மன்ற செயற்பாடுகள் மிகவும் குறைவடைந்து செல்கின்றது. வாரத்திற்கு ஒருமுறை தமிழ் மன்றங்களின் செயல்பாடு பாடசாலைகளில் இடம் பெற்றால் மிகப் பயனான நல்ல விளைவுகளை நாம் எதிர் நோக்கலாம். பாடக்கூடியவர்கள் பேசக்கூடியவர்கள் கவித்துவம் மிக்கவர்கள் நாடக வித்துவான்களை பள்ளிப் பருவத்திலே பாடசாலைகளில் வளர்த்துக் கொள்வதற்கு இத்தகைய தமிழ் மன்றங்கள் சங்கங்கள் கட்டாயம் செயற்பட வேண்டும்.

பல சான்றோர்கள் தங்களுடைய ஆரம்பகால சிறப்பு பற்றி கூறுகின்ற போது பாடசாலைகளில் நடைபெற்ற தமிழ் சங்கம் போன்ற பாடசாலைகளில் ஈடுபட்ட இணைபாடவிதான செயல்பாடுகள் தங்களை எந்த அளவு தூரம் வளர்த்தது என குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலை இன்று சற்று தாழ்வு பெற்றிருக்கின்றது. 21 ஆம் நூற்றாண்டு நவீனத்துவம் எங்களை சூழ்ந்து கொண்டாலும் நாம் எமது தொன்மைகளை தொலைத்து விடக் கூடாது. பாடசாலைகளில் தாய் மொழியாகிய தமிழ் மொழியை வளர்ப்பதற்கு பள்ளித்தலங்களில் தமிழ் மன்றங்கள் அவசியமாக செயல்பட வேண்டும். அதை வளர்ப்பதற்கு ஆசிரியர்களும் பாடசாலை அதிபர்களும் முயற்சி செய்ய வேண்டும்.

இது காலத்தின் கட்டாயம். நமது சமூகத்தின் எதிர்கால வாழ்வுக்கு பெரும் உதவியாக அமையும் என்பதில் ஐயம் இல்லை. இப்பணியை அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுத்துவீர்கள் என்று எதிர்பார்ப்போம்.

**கலாநிதி. செஞ்சொற்செல்வர்**
**ஆறு. திருமுருகன்**

# நல்லையாதீன சுவாமிகளின் நினைவுப் பிரார்த்தனை குப்பிளான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் நடைபெற்றது



2025 மே 17ஆம் தேதி, சிவபூமி குப்பிளான் ஞான ஆச்சிரமத்தில் நல்லையாதீன சுவாமிகளின் நினைவுப் பிரார்த்தனை வழிபாடும், அதனைத் தொடர்ந்த விசேட அன்னதான நிகழ்வும் பெருமைபெற்ற முறையில் நடைபெற்றது.

குப்பிளான் ஞான ஆச்சிரமம் நடத்திய இந்த நிகழ்வு, நல்லையாதீன சுவாமிகளின் நினைவுகளை சீராக போற்றும் ஒரு புகழ்பெற்ற முயற்சியாக அமைந்தது. ஆன்மிக உணர்வும், சமூக ஒற்றுமையும் ஒன்றிணைந்த இந்த நிகழ்வு, எதிர்கால சந்ததியினருக்கும் ஒரு முன்னுதாரணமாகத் திகழும்.



# கனடா வாழ் சொந்தங்களின் அன்பில் திளைத்த செஞ்சொற்செல்வர்



கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களின் கனடா பயணத்தின் போது பல ஆன்மீக நிகழ்வுகளில் கலந்து கொண்டதோடு பெருமளவு கனடா வாழ் உறவுகள் ஐயா அவர்களை நேரில் வந்து சந்தித்து தமது மகிழ்ச்சியையும் அன்பையும் வெளிப்படுத்தினர்.

அந்த பசுமையான நிகழ்வுகளின் சில புகைப்படத் தொகுப்புக்களை இங்கே பகிர்கின்றோம்.





















© perinpanathan sinnathambi


© perinpanathan sinnathambi




© perinpanathan sinnathambi




© perinpanathan sinnathambi

















# ஸ்காபுறோவில் கனடா ஈழநாடு பத்திரிகையின் ஆண்டு விழாவில் சேகரிக்கப்பட்ட நிதி மக்கள் நலன் சார்ந்த திட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பெற்றன




இம்மாதம் 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கனடா ஸ்காபுறோவில் நடைபெற்ற ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழாவில் சேகரிக்கப்பட்ட நிதி கனடா ஈழநாடு பத்திரிகை வாசகர்கள் சார்பில் இலங்கைப் பணப் பெறுமதி 25 லட்சம் ருபா (11,415.55 கனடிய டொலர்கள்) வேர்களைத் தேடுங்கள் என்ற தலைப்பில் சிறப்புரையாற்ற ஈழத்தில் இருந்து வருகை தந்த தமிழினத்தின் செஞ்சொற்செல்வர் அறப்பணியாளர் திரு சிவபுமி அறக்கட்களையின் தாபகர் ஆறு.திருமுருகன் அவர்களிடம் கையளிக்கப்பெற்றது ஆறு.திருமுருகன் அவர்களினால் முள்ளிவாய்க்காலில் உருவாக்கப்படவுள்ள மனநலம் குன்றியோர் பாதிக்கப்பட்டோர் இல்லத்திற்கு வழங்கப்பட்டது.










மேலும் அன்றைய விழாவில் சேகரிக்கப்பட்ட நிதியின் ஒரு பகுதியில் கனடா ஈழநாடு பத்திரிகை வாசகர்கள் சார்பில் 10,000.00 டொலர்கள் கனடாவில் உருவாகும் தமிழ்சமூக மையத்திற்கு வழங்கப்பெற்றது. இந்த தொகை மேற்படி அரங்கத்தில் திட்டத்தின் தலைவர் சாந்தா பஞ்சலிங்கம் அவர்களிடம் கையளிக்கப்பட்டது. மேலும் அன்றைய தினம்.

ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழாவில் கனடாவில் வர்த்தகத்துறையில் ஈடுபட்டு வெற்றிகளை ஈட்டியது மாத்திரமன்றி சமூகத்தின் நலனுக்காகவும் பங்களிப்புக்களை தொடர்ச்சியாக வழங்கிவரும் 5 வெற்றியாளர்களுக்கு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றது.

அவரம்களில் திரு சங்கர் நல்லதம்பி- தமிழ்ச் சமூகத்தில் நன்கு பரீட்சயமானவர் அத்துடன் . ஹோட்டல் உரிமையாளர். அவரது Vibrant Hospitality Group என்ற நிறுவனத்தின் மூலம் பலருக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கிவருகின்றார்.



அடுத்தவர். அரசியல் மற்றும் சமூகத் துறையில் பங்களிப்புகளை வழங்கிவரும் ஸ்ரீ என்று அறியப்பெறுகின்றதிரு. ஸ்ரீகந்தராஜன் வல்லிபுரநாதர் அவர்கள் அடுத்தவர். வீடு விற்பனைத்துறையில் சாதனை படைத்த திரு ராஜ்.நடராஜா அவர்கள் அடுத்தவர்



வர்த்தகத்துறையிலும் சமூக சேவையிலும் நன்கு அறிமுகமான திரு கிரு‘ணகோபால் செல்லத்துரை அவர்கள்.

இறுதியாக திரு அகிலன் மயில்வாகனம் அவர்களும் கௌரவிக்கப்பெற்றார். இவர் வங்கிச் சேவையிலும் சமூகப் பங்களிப்பிலும் சிறந்து விளங்குபவர்.

இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பட்டவையாகும். படங்களில் பத்திரிகையின் ஆசிரியர் திரு பரமேஸ்வரன் மற்றும் ஆறு.திருமுருகன் அவர்கள் ஆகியோர் காணப்படுகின்றனர்.












# யாழ் இந்துக் கல்லூரியின் கால்கோள் விழா – 2025




2025 மே 16 ஆம் திகதி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆறாம் தரத்தில் புதிதாக சேரும் மாணவர்களை வரவேற்கும் “கால்கோள் விழா” வெகுவிமரிசையாக நடைபெற்றது. இவ்விழா கல்லூரி அதிபர் திரு. செந்தில் மாறன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில், புதிய மாணவர்களும், அவர்களின் பெற்றோர்களும் மதிப்புகூர்ந்த வரவேற்பைப் பெற்றனர். புதிய மாணவர்கள் பூச்செண்டு கொடுத்து வரவேற்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில், அதிபர் அவர்களின் உரை மிகவும் ஊக்கமளிக்கும் வகையில் இருந்தது. அவர், யாழ் இந்துவில் கல்வி என்பது வெறும் புத்தக அறிவைத் தாண்டி, ஒரு மாணவனை முழுமையான நற்குணங்கள் உடைய நபராக மேம்படுத்தும் பயணமாகும்






என வலியுறுத்தினார். வழமையாக ஆண்டுதோறும் நிகழ்வில் கலந்து ஆசி வழங்கும் கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள் இவ்வாண்டு அவுஸ்திரேலியா பயணத்தில் இருந்த போதும் இணையம் ஊடாக மாணவச் செல்வங்களுக்கு தனது ஆசிகளை வழங்கினார்கள். வேலன் சுவாமிகள் நேரில் வந்து மாணவர்களுக்கு ஆசி வழங்கினார்.

பெற்றோர் மற்றும் மாணவர்கள் கல்லூரியின் உயரிய கல்வி பண்பாட்டு நிலைமைகள் குறித்து பெருமிதம் கொண்டனர்.விழா முடிவில், மாணவர்களுக்கு பள்ளியின் அடுத்த கட்ட பயணத்திற்கு உற்சாகமும் நம்பிக்கையும் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வு, மாணவ வாழ்வின் புதிய தொடக்கத்துக்கு சிறந்த வரவேற்பாக அமைந்தது.













# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான செயற்திட்டம்



Save a Life அமைப்பு தனது சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு இரண்டு PET பிளாஸ்டிக் கழிவுகள் சேகரிக்கும் தொட்டிகளை (collection bins) அண்மையில் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்த தொட்டிகள் மூலம், மாணவர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தினர் பயன்படுத்தும் பிளாஸ்டிக் கழிவுகள் சேகரிக்க பயன்படுத்தப்படும். இதன் மூலம் பிளாஸ்டிக் கழிவுகளை குறைத்து, மறுசுழற்சி செயலை ஊக்குவித்து, சுத்தமான மற்றும் பசுமைமிக்க சுற்றுச்சூழலை உருவாக்கும் நோக்கம் அடங்கியுள்ளது.

இந்த செயற்பாடு Plastic Free Rivers and Seas for South Asia (PLEASE) திட்டத்தின் ஒரு பகுதியாகும். இந்த PLEASE திட்டத்தை தெற்காசிய கூட்டுறவு சுற்றுச்சூழல் திட்டம் (SACEP) செயல்படுத்துகின்றது. உலக வங்கியின் நிதி உதவியுடன் மற்றும் UNOPS (United Nations Office for Project Services) இன் செயல்படுத்தும் ஆதரவுடன், இந்த திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.



பிளாஸ்டிக் மாசுபாடு இன்று உலகளாவிய அளவில் பெரிய சவாலாக இருக்கின்றது. இவ்வாறு பாடசாலை மாணவர்களில் இருந்து விழிப்புணர்வை உருவாக்குவதன் மூலம், எதிர்காலத் தலைமுறைகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் அதிக பங்கு வகிக்க முடியும். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இந்த முயற்சி நடைமுறைக்கு வருவது பெருமைக்குரியதொரு முன்னேற்றமாகும். இந்த சிறப்பு நிகழ்வு, மாணவர்களிடையே பசுமை சிந்தனையையும், சமூக பொறுப்புணர்வையும் வளர்க்கும் வழிவகையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

# பக்தி பூர்வமாக நிகழ்ந்த நாச்சிமார் அம்மன் கோயில் வருடாந்த மகோற்சவம்



வண்ணார் பண்ணை பகுதியில் அமைந்துள்ள புனிதமான காமாக்ஷி அம்பாள் ஆலயம், “நாச்சிமார் அம்மன் கோயில்“ என அன்போடு அழைக்கப்படுகிறது. இந்த ஆலயத்தில் வருடம் தோறும் சிறப்பாக நடைபெறும் மகோற்சவம் பக்தர்களால் ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் ஒரு ஆன்மிக நிகழ்வாகும்.



இந்த ஆண்டின் மகோற்சவம் வழக்கமானதை விட மிகுந்த சிறப்புடனும், பக்திச் சிருஷ்டியுடனும் நடைபெற்றது. பல பக்தர்கள் வருகை தந்து, தங்கள் விருப்பங்களை நிறைவேற்றும் நோக்கில் விரதம் இருந்து அம்பாளை வழிபட்டனர்.

அம்பாள் விதம் விதமான மலர் அலங்கார சோடனைகளில் உலா வந்து பக்தர்களுக்கு திருக்காட்சி கொடுத்தார். மகோற்சவ காலம் முழுவதும் ஆலயச் சூழல் பக்திமயமாக இருந்தது.





# யாழ் போதனா வைத்தியசாலைக்கு 268 தாதிய உத்தியோகத்தர்கள் நியமனம்!





28.05.2025 யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு புதிதாக இரண்டு தாதிய பரிபாலர்களும் 268 தாதிய உத்தியோகத்தர்களும் நியமனம் பெற்று வந்துள்ளார்கள். தாதிய பதிபாலர்களுக்கான வெற்றிடங்கள் ஐந்து இருக்கின்ற போதும் இரண்டு நியமனங்களே வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



ஏற்கனவே சேவையில் உள்ள தாதிய உத்தியோகத்தர்களில் 168 பேர் வருடாந்த இடமாற்றம் பெற்று செல்ல உள்ளனர். புதிதாக வருகை தந்தவர்களில் சுமார் 60 பேர் தமிழ் மொழி சார்ந்தவர்களாகவும் ஏனைய அனைவரும் சகோதர மொழி பேசும் சிங்களவர்களாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. யாழ் போதனா வைத்தியசாலைக்கு நியமனம் பெற்றுவந்த 268 புதிய தாதிய உத்தியோகத்தர்களை வரவேற்கும் நிகழ்வு தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்றது.



# நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் பழைமையும் சிறப்பும்.




ஈழத்தில் நயினாதீவு வரலாற்று பழமை மிக்கதொரு இடமாகும். இந்த தீவில் நாகர்களின் ஆதிக் குடியிருப்பாலும், அங்கு இடம் பெற்ற நாக வழிபாட்டாலும், நாகங்கள் அதிகமாக அங்கு வாழ்ந்ததாலும் நாகதீவு என்றும், நயினாதீவு என்றும் பெயர் வழங்கப்பட்டது.

நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயில் இலங்கை, யாழ்ப்பாண மாவட்டத்தில், நயினாதீவில் உள்ள ஒரு புகழ் பெற்ற இந்து கோயில் ஆகும். மேலும் இக்கோவில் பதினெட்டு மகா சக்தி பீடங்களில் தேவியின் இடுப்புப் பகுதி விழுந்த பீடமாகவும் தந்திர சூடாமணி கூறும் 51 சக்தி பீடங்களில் தேவியின் சிலம்புகள் விழுந்த பீடமாகவும் கருதப்படுகிறது.

ஈழத்தின் பழம்பெரும் அம்மன் கோவில், 64 சக்தி பீடங்களுள் ஒன்றாகத் திகழும் ஆலயம், அம்மன் சுயம்புவாக தோன்றிய திருத்தலம், தலபுராணச் சிற்பங்கள் நிறைந்த சித்திரத் தேர் கொண்ட கோவில் என பல்வேறு சிறப்புகள் கொண்டு விளங்குவது, நயினாதீவு நாகபூஷணி அம்மன் திருக்கோவில்.

முக்கியத்துவம் வாய்ந்த சக்தி வழிபாட்டுத் தலங்களில், ஈழ நாட்டில் உள்ள நயினாதீவும் ஒன்றாகும். 64 சக்தி பீடங்களில்



இது, புவனேஸ்வரி பீடமாக திகழ்கின்றது. காளிதாசரால் வணங்கப்பட்ட தலங்களுள் இதுவும் ஒன்று.

நயினாதீவில் கோவில் கொண்டுள்ள நாகபூஷணி அம்மன் வரலாறு, மிகவும் தொன்மையானதாகும். கருவறையில் உள்ள மூலவர் சிலையானது, காந்தார சிற்பக் காலத்தைச் சார்ந்ததாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். சுயம்புவாகத் தோன்றிய அம்பிகையின் வடிவத்தை, இந்தியாவில் இருந்து வந்த நயினாபட்டர் என்ற வேதியர் பூஜித்து வந்தார். நயினாதீவுக்கு அருகில் உள்ள புளியந்தீவில் இருந்த நாகமொன்று, அம்மனைத் தரிசிக்க தினந்தோறும் கடலில் நீந்தி வருவது வழக்கமாக இருந்தது. அவ்வாறு வரும் போது, அம்மனுக்கு அர்ச்சனை செய்ய, புளியந்தீவில் இருந்து பூக்களை கொண்டு வருவது வாடிக்கை.

ஒருநாள் வழக்கம் போல் பூக்களுடன் நீந்தி வந்த நாகத்தை, கருடன் ஒன்று உணவாக்க முயன்றது. இதனால் பதறிய நாகம், கடலில் எழும்பி நின்றிருந்த கல் பாறை ஒன்றில் ஒதுங்கியது. அந்த இடத்திற்கு வந்த கருடனுக்கும், நாகத்திற்கும் இடையே சண்டை ஏற்பட்டது.

அந்த நேரத்தில் வாணிகம் செய்வதற்காக காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்து, கப்பல் மூலம் இலங்கை சென்று கொண்டிருந்தான் மாநாயக்கன் என்ற வணிகன். அவன் நாகத்தை கருடன் கொல்ல முயல்வதைக் கண்டு மனம் இரங்கினான். நாகத்தை காப்பாற்றும் நோக்கில் கருடனிடம், நாகம் அம்மனை வழிபடும் நோக்கத்தைத் தடுக்க வேண்டாம் என்று வேண்டினான்.

அதற்கு கருடன், ஐயா! அம்மன் மீது உமக்கு பக்தி இருக்குமானால், கப்பலில் உள்ள உன் பொருட்கள் அனைத்தையும் அம்மன் ஆலயத்திற்குத் தர சம்மதம் சொல்வீரா? அப்படி நீ ஒப்புக்கொண்டால், நானும் உமக்காக இந்த நாகத்தை விட்டு விடுகிறேன். என்றது. கருடனின் சவாலுக்கு வணிகன் ஒப்புக்கொண்டான். தான் கப்பலில் கொண்டு வந்த பொருட்களை எல்லாம் கோவிலுக்கு வழங்கி விட்டான். இதனால் நாகம் விடுதலை பெற்று, வழக்கம் போல



அம்மனை வழிபட்டது. வணிகன் கொடுத்த பொருட்களைக் கொண்டு கோவில் அழகாகவும், சிறப்பாகவும் கட்டமைக்கப்பட்டது.

நயினாதீவின் அருகே பாம்பு சுற்றிய கல் இருப்பதையும், கருடன் கல் இருப்பதையும் இன்றும் காணலாம். இது இத்தலம் குறித்து கூறப்படும் கர்ண பரம்பரைக் கதையாகும்.
இவ்வாறு சிறப்புற்றிருந்த ஆலயம், ஒல்லாந்தர் என்னும் போர்ச்சுக்கீசியர் காலத்தில் தரைமட்டமாக்கப்பட்டது. இதன் சுவடுகள் இன்றும் கடலின் அடியில் காணப்படுவது, இதனை உறுதி செய்கின்றது. போர்ச்சுக்கீசியர் போர்தொடுக்கும் முன்பாக, ஆலயத்தின் முக்கிய மூர்த்திகள், பொருட்களை பக்தர்கள் மறைத்து வைத்தனர்.


அம்பாளை ஆலய மரப் பொந்தில் வைத்து வழிபட்டனர். டச்சுக்காரர் ஆட்சிக்குப் பின்பு, நயினாதீவில் நாகேஸ்வரி கோவில் சிறிய அளவில் மீண்டும் எழுப்பப்பட்டது. இதன்பிறகு அழகிய கோபுரம் அமைக்கப் பட்டது. 1935-ம் ஆண்டு ராஜகோபுரம் கட்டப்பட்டிருக்கிறது. கோவிலைச் சுற்றி மடங்களும் உருவாக் கினர். 1951-ல் விமானங்கள் புனரமைக்கப்பட்டு குட முழுக்கு நடைபெற்றது.
வரலாறு :

நயினாதீவு பல்வேறு வகையிலும் சிறப்புப்பெற்ற தீவாகக் காணப்படுகின்றது. தமிழர்களின் முன்னோர்களான நாகர் இனத்தவர்கள் போற்றப்படுகின்றனர். நாகர்களின் முக்கிய வழிபாடாகக் காணப்பட்டது.

## நாகவழிபாடு.

ஈழத்தமிழர்களிடையேயும், தமிழகத் தமிழர்களிடையேயும், ஆதியிலிருந்தே நாகவழிபாடு காணப்பட்டதென்பதற்கு அதன் எச்சங்களாகக் காணப்படும் வழிபாட்டு முறைகளும், ஊர்ப்பெயர்களும் சான்றாகக் காணப்படுகின்றன.

நாகர்கோயில் நாகதேவன்துறை, நாகதீவு போன்ற பெயர்களும், இன்றும் மக்களால் பின்பற்றப்பட்டுவரும் நாக வழிபாட்டுமுறையும், இக்கூற்றை உறுதி செய்கின்றது.



ஆரியர் வருகை காரணமாக முதன்மை வழிபாடாகக் காணப்பட்ட நாக வழிபாடு அருகியே பின்பற்றப்பட்டது. ஆதியிலே காணப்பட்ட நாக வழிபாட்டுத் தலங்கள் யாவும், நாகதம்பிரான் கோயில், நாகம்மாள் கோயில் என உருமாற்றம் பெற்றன.


ஈழத்தில் நாகர்களின் முக்கிய பிரதேசமாக நயினாதீவு காணப்பட்டுள்ளது. ஆதியில் நாகர்களின் முக்கிய வழிபாட்டுத்தலமாகக் காணப்பட்டுப் பின்னர், நாகபூசணி அம்மன் திருக்கோயிலாக மாற்றம் பெற்ற தலமே, நயினாதீவு ஸ்ரீ நாகபூஷ ணி அம்மன் ஆலயமாகும்.

இக்கோவிலின் கருவறையிலுள்ள சீறும் ஐந்தலை நாகச்சிலை, பல்லாயிரமாண்டுகள் பழமையானதென ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். ஈழத்திலே காணப்படும் பெரும்பாலான கோயில்கள். ஐதீகம் மற்றும் புராணக் கதைகளோடு மட்டும் தொடர்பு கொண்டவையாகக் காணப்படும்போது, நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயம், பல்வேறு தொடர்புகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

வரலாற்றுக் குறிப்புகள், சாசன ஆதாரங்கள், தமிழ் இலக்கியத் தொடர்புகள், கர்ண பரம்பரைச் கதைகள், புராண வரலாறுகள் எனப் பல்வேறுபட்ட தொடர்புகளையுடையதாக விளங்கும் சிறப்புப் பெற்றது இவ்வாலயம். இவ்வாலயம் அமைந்துள்ள தீவும் மிகத் தொன்மையான வரலாற்றைக் கொண்டு, பல்வேறு வகையில் ஆலயத்தோடும் தொடர்பு கொண்டுள்ளது.

சரியான வரலாறுகள் காணப்படாதவிடத்து இலக்கியங்களே வரலாறாகவும் கருதப்படுவதுண்டு. ஈழத் தமிழர்களின் தொன்மையும் வரலாறும் இலக்கியங்களில் பொதிந்து கிடக்கின்றது.

இந்திரன் தனது சாபம் நீங்கி அம்மனுக்கு ஆரம்பத்தில் சிறிய ஆலயம் கட்டினான் என்றும், ஆதியில் அன்னைக்கு நாகம் அயலிலுள்ள புளியந்தீவில் இருக்கும் நாகதம்பிரானிடம் பூப்பறித்து கடல்வழியாக வரும் வேளையில் கருடன் இடைமறித்து நாகத்தை கொல்ல எத்தனிக்கும் பொழுது அவ்வழியே வந்த வணிகரான மாநாய்க்கன் பிணை தீர்த்து நாகத்தை வழிபடச்செய்தான் என்றும், மகாபாரதத்தில் அர்சுனன் நாகங்களைக் கொன்ற பாவங்கள் தீர



நாகதீவு (நயினாதீவு) வந்து நாககன்னியை மணந்து பப்பரவன் என்ற மகனைப் பெற்றதும் அந்த மகனின் பெயரிலே இன்றும் அம்பாளின் ஆலயத்திடலுக்கு பப்பரவன் திடல் என்றும் அழைப்பர்.

மணிமேகலையில் நாக இளவரசியான பீலிவளை மீது கிள்ளி என்னும் சோழ வேந்தன் காதலுற்று அவளைப் பிரிந்து வருடந்தோறும் நடத்தும் இந்திர விழாவையும் நடத்த மறந்தான் என்றும் இவர்களின் குழந்தையே தொண்டமான் இளந்திரையன் என்றும் இவனின் சந்ததியினரே பிற்காலத்தில் தொண்டைமான் சந்ததியினரும் தொண்டை மண்டலத்தேசத்தவரும் ஆவர். எனவே நயினாதீவானது பல கர்ணபரம்பரைக் கதைகளோடும் பல புராண இதிகாசங்களோடும் பின்னிப் பிணைந்திருப்பதை அதன் எச்சங்களில் இருந்து அறியமுடிகிறது.

நாகபூஷணி அம்மன் :



கருவறையில் அமைந்துள்ள சுயம்பு நாகபூஷணி அம்மன், நீள்உருளை வடிவத் திருமேனியராக எழிலாக காட்சி தருகின்றாள். என்றாலும், அலங்காரத்தால் அன்னையின் முகம் மட்டுமே காட்சியளிக்கிறது. பின்புறம் சீறும் நாகமாக ஐந்து தலை நாகம் உள்ளது. இத்திருமேனிகள் பழமையானவை என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இங்கு ஐந்து கால பூஜைகள் நடைபெறுகின்றன. சிவன், அம்பாள், விநாயகர், சுப்பிரமணியர், விஷ்ணு ஆகிய ஐவரின் பூஜை நாட்கள் மாதந்தோறும் நடத்தப்படுகின்றன. பகலில் சங்காபிஷேகம், இரவில் ஸ்ரீசக்கர பூஜை நடைபெறுகிறது. விஜயதசமி மற்றும் வன்னிமர பூஜையும் நடத்தப்படுகின்றன.

ஆனி மாதத்தில் 15 நாட்கள் பிரம்மோற் சவம் வெகு விமரிசையாக நடைபெறும். இதில் இலங்கை மற்றும் வெளிநாட்டு பக்தர்கள் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொள்கின்றனர். திருவிழாவின் 14-ம் நாள் தேரோட்டம் நடைபெறும்.

இவ்வாலயம் 1986-ம் ஆண்டு முதல் பன்னிரண்டு உறுப்பினர்களைக் கொண்ட அறங்காவலர் சபையால் நிர்வாகம் செய்யப்பட்டு வருகிறது. ஆலய பூஜைகள், கயிலாசநாத குருக்கள் என்பவரது பரம்பரையால் சுமார் 250 ஆண்டுளாக நடத்தப்படுகின்றன. ஆலய தல மரம் வன்னி, தல தீர்த்தம் தீர்த்தக்கேணி ஆகும்.

இலக்கியங்கள் :

யோகி சுத்தானந்த பாரதியார் இயற்றிய மனோன்மணி மாலை, அமரசிங்கப்புலவர் இயற்றிய நயினை நாகபூஷணியம்மை திரு ஊஞ்சல், வரகவி முத்துக்குமாருப் புலவர் இயற்றிய நயினை நாகபூஷணியம்மை திருவிருத்தம், வரகவி நாகமணிப்புலவர் எழுதிய நயினை மான்மியம, வேலனை தம்பு உபாத்தியார் இயற்றிய திருநாக தீபப் பதிகம், க.ராமச்சந்திரன் இயற்றிய தேவி பஞ்சகம், நயினைத் தீவு சுவாமிகள், கவிஞர் செல்வராஜன் இயற்றிய பாடல்கள் என எண்ணற்ற இலக்கியங்கள் அன்னையைப் புகழ்கின்றன.



நாகபூஷணித் தேர் :

இலங்கை நாட்டின் தேர்களில் நாகபூஷணி ஆலயத் தேர் தனித்துவம் வாய்ந்தது. இத்தேரில் வரலாற்று நிகழ்வு, கிருஷ்ணர், அஷ்டலட்சுமி, நாகம் புளியந்தீவில் பூப்பறித்தல், கருடன் காத்திருப்பது, மணல் லிங்கம் எழுப்பி வழிபடும் காமாட்சி போன்ற வரலாறுகள் தத்ரூபமாகச் செதுக்கப்பட்டுள்ளன. மேலும், தேரில் நாகபூஷணி பவனிவர, தேரோட்டியாக பிரம்மனின் மனைவி பிரமாணி இருப்பதும் குறிப்பிடத்தக்க அம்சம் ஆகும். மூன்று வரிசையில், எட்டுத்திசைகளிலும், மரச்சிற்பங்கள் கலைநயத்தோடு மிளிர்கின்றது.

தொன்மைச் சிறப்பு :

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை காப்பியம், நயினா தீவை ‘மணிபல்லவம்’ என்று குறிப்பிடுகிறது.



நயினாதீவு பண்டைய காலத்தில் சிறந்த துறைமுகமாக விளங்கியதை இங்கு கிடைத்த தொல்லியல் சான்றுகள் உறுதி செய்கின்றன.

நாகர்கள் வாழ்ந்த காலத்திலேயே நயினாதீவில் மக்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். ஏறத்தாழ 14000 ஆண்டுகளுக்கு முன்பே நயினாதீவில் குடியேற்றம் இருந்தது என்றும். அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட நாகபூசணி அம்மன் கோவிலின் மூலஸ்தானத்தில் உள்ள நாக விக்கிரகம் 14000 ஆண்டுகளுக்கு மேற்பட்டது என்றும் கட்டிட, சிற்பக்கலை பொறியியல் நிபுணரான திரு. எம். நரசிம்மன் அவர்கள் தனது நூலில் (11.03.1951) குறிப்பிட்டுள்ளார்.

ஆலயம் தினமும் காலை 5.30 மணி முதல் பகல் 2 மணி, மாலை 4 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் சுவாமி தரிசனம் செய்யலாம்.

## அமைவிடம் :

இலங்கையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இந்து மகா சமுத்திரத்தில் உள்ள நயினாதீவில் நாகபூஷணி அம்மன் திருக்கோவில் அமைந்துள்ளது. கொழும்பில் இருந்து 431 கி.மீ. தூரத்திலும், யாழ்ப்பாணம் நகரில் இருந்து 38 கி.மீ. தொலைவிலும் நயினா தீவு அமைந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து குறிகாட்டுவான் படகுத்துறை வரை பேருந்து செல்கிறது. அங்கிருந்து எந்திரப்படகு மூலம் நயினாதீவுக்குச் சென்று வர வேண்டும்.

எதிர்வரும் 26.06.2025 வியாழக்கிழமை நாகபூஷணி அம்பாள் கொடியேற்றம் காண்கிறாள்.



ஆக்கம் - மு.பாபுஜி
பண்ணாகம்

# சிறந்த வெற்றிகளோடு வசந்த விழாவில் சிவபூமி பாடசாலை




யாழ்ப்பாண பிரதேச செயலகத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட வசந்த விழா, மாணவர்களின் கலை திறமைகளை வெளிக்கொணரும் அருமையான ஒரு வாய்ப்பாக அமைந்தது. இவ்விழாவில் சிவபூமி பாடசாலை மாணவர்கள் கலாசார மற்றும் கலைப்போட்டிகளில் பல சாதனைகளை செய்தனர்.

மாணவர்கள் குழுப்பாடல், சித்திரம், மாலைகட்டுதல், கோலம்போடுதல், பேச்சு போன்ற போட்டிகளில் பங்கேற்று பல்வேறு பரிசுகளை வென்றதோடு, அதிக எண்ணிக்கையிலான பரிசுகளைப் பெற்றுள்ளனர். இது அவர்களது முயற்சி, திறமை, மற்றும் ஆசிரியர்களின் வழிகாட்டலின் பயனாக கிடைத்த வெகுமதி ஆகும்.










விழாவின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றாகிய குழுப்பாடலும், குழுநடனமும் சிறப்பாக வழங்கப்பட்டன. மாணவர்கள் தங்கள் திறமைகளை களத்தில் வெளிப்படுத்தி, பார்வையாளர்களின் பாராட்டுக்களையும் பெற்றனர்.

வசந்த விழாவில் சிவபூமி பாடசாலை மாணவர்கள் பெற்ற வெற்றி, பாடசாலையின் உயர்ந்த கல்வி மற்றும் கலாசார நிலையை எடுத்துக்காட்டுகிறது. எதிர்காலத்திலும் மேலும் பல வெற்றிகளை கட்டியெழுப்பிட வேண்டி வாழ்த்துக்களும், பாராட்டுகளும் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றன.

## கௌரவ விருது பெற்றார் திரு. ந. விஜயசுந்தரம்



புதுவையில் நடைபெற்ற கம்பன் விழாவில், இலங்கை யாழ்ப்பாணம் வலம்புரி பத்திரிகையின் ஆசிரியர் திரு.ந. விஜய சுந்தரம் அவர்கள் கௌரவ விருது பெற்றமை எமது மண்ணிற்கு பெருமை தரும் விடயமாகும்.

கம்ப ராமாயணம் தொடர்பாக ஆழ்ந்த ஞானம் கைவரப் பெற்ற திருவாளர் விஜயசுந்தரம் அவர்களுக்கு இவ்விருது சாலப் பொருத்தமானது. தொடர்ந்து நல்ல தமிழ் செய்ய எமது பாராட்டுக்கள்

# எளிமையாக கொண்டாடப்பட்ட எமது தலைவரின் பிறந்தநாள் விழா



சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களின் பிறந்தநாளான 28.05. 2025 அன்று சிவபூமியின் பல கிளை அமைப்புக்களில் விசேட வழிபாடுகள் நடைபெற்றன. தலைவர் அவர்கள் நீண்ட ஆயுளோடு உடல் உள நலத்தோடு வாழ்ந்து இந்த மண்ணிற்கும் மக்களுக்கும் பணி செய்ய வேண்டும் என பிரார்த்தனை செய்யப்பட்டது.

இன்று சிவபூமி அறக்கட்டளை வழியாக: 234 மாற்றுத் திறனாளி சிறார்களுக்கு இலவச கல்வி, தொழில்பயிற்சி மற்றும் உணவு வழங்கப்படுகிறது. 126 ஆதரவற்ற முதியவர்கள் இரண்டு தனித்தனி இல்லங்களில் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகின்றனர். பல்கலைக்கழக மாணவர்கள், பொதுப்பள்ளி மாணவர்கள், அங்கவீனர்கள் என பல தரப்பினருக்கு மாதாந்த ஆதரவு வழங்கப்படுகிறது. 198 பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.
174 மாணவர்கள் அறநெறி கல்வி மற்றும் மாலை நேர இலவச கல்வியை பெறுகின்றனர். பல மடங்கள், ஆச்சிரமங்கள் ஊடாக இலவச அன்னதான திட்டமும் தொடர்ந்து செயல்படுகிறது.



இவ்வாறு சிவபூமியின் பணிகளுக்கெல்லாம் ஆணிவேராக விளங்கும் தலைவர் ஐயா அவர்களுக்கு எமது பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்







# கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மரக் கன்றுகள் நாட்டப்பட்டன



28.05.2025 கோண்டாவில் மனவிருத்தி பாடசாலையில் ஒரு முக்கியத்துவமிக்க நிகழ்வு இடம்பெற்றது. மாணவர்களின் சூழல் விழிப்புணர்வை வளர்க்கும் நோக்கில், மரக்கன்று நடும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் எமது அறக்கட்டளையின் தலைவர் திரு. ஆறு. திருமுருகன் அவர்கள் பிறந்தநாளை முன்னிட்டு சமூகத்துக்கு பயனளிக்கும் விதமாக 64 மரக்கன்றுகளை எமது மாணவர்கள் ஆசிரியர்களுடன் இணைந்து பாடசாலையின் வளாகத்தில் நட்டனர்.

சுற்றுச்சூழலை பாதுகாக்கும் பணியில் இவ்வாறு மாணவர்களை ஈடுபடுத்துவது பாராட்டத்தக்க ஒரு முயற்சி ஆகும். மரங்களை நடுவது என்பது வெறும் நிகழ்வு மட்டுமல்ல் அது எதிர்காலத்துக்கான உயிரின் வித்தை விதைப்பதாகும். மாணவர்கள் மரங்களை நட்டபின், அவற்றை பராமரிக்கத் தேவையான நடவடிக்கைகள் மற்றும் பராமரிப்பு முறைகள் பற்றிய விழிப்புணர்வும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வு, மாணவர்களுக்கு பொறுப்புணர்வு, இயற்கை மீது அக்கறை மற்றும் சமூக பங்களிப்பு என்பவற்றை உணர்த்தியது.

இந்த மரக்கன்றுகள் நாளொரு நாள் பெரிய மரங்களாக வளர்ந்து, மாணவர்களுக்கான நிழலும், இயற்கைக்கு உயிரும் தரும் என்பதில் சந்தேகம் இல்லை. இவ்வாறு, ஒரு பிறந்தநாளை சமூக நலன் கருதி கொண்டாடும் நிலைபாடு அனைவருக்கும் முன்னுதாரணமாக அமைந்துள்ளது.





# இதய அஞ்சலி



வவுனியா ஓமந்தை பகுதியில் திங்கட்கிழமை (26.05.2025) அதிகாலை இடம்பெற்ற விபத்தில் யாழ்ப்பாணம் இந்திய துணை தூதரக அலுவலர் பிரம்மஸ்ரீ சச்சிதானந்த குருக்கள் பிரபாகரசர்மா சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளதுடன் மனைவி, மகன் மற்றும் மாமனார் ஆகியோர் படுகாயமடைந்தனர். யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் மற்றவர்கள் சிகிச்சை பெற்று வந்தனர். இந்நிலையில், தற்போது, மகன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதுடன் தாய் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரபா ஐயா ஆற்றலும் ஆளுமையும் நிறைந்த செயல்வீரர். அழகு தமிழில், ஆங்கிலத்தில் இந்திய தூதுவராலய அரங்குகளில், அறிமுக உரைகள் ஆற்றிய காட்சிகள் மறக்க முடியாதவை. டாக்டர் அப்துல் கலாம் முதல் எத்தனை பெரியவர்களின் வரவேற்பு நிகழ்ச்சிகளை நெறிப்படுத்திய செயல் வீரர். இவ்வாறு பல பரிமாணங்களில் மிளிர்ந்தவரது இழப்பு ஈடு செய்ய முடியாதது.

பிரபா ஐயாவினதும் அவரது மூத்த மகனும் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்தனை செய்கிறோம். அதோடு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மற்றவர்கள் உடல்நலம் பெறவும், பெரும் துயர் ஒன்றில் உள்ள அவர்கள் குடும்பம் அதில் இருந்து மீளவும் எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டும்.



# சிவபூமி முதியோர் இல்லத்தில் வைகாசி விசாக பூசை

வைகாசி விசாகம் ஒரு ஆன்மிகமும் அர்ப்பணிப்பும் நிறைந்த நாள். யாழ்ப்பாணம் சிவபூமி முதியோர் இல்லத்தில் 09.06.2025 காலை விமர்சையாக வைகாசி விசாக பூசை நடைபெற்றது. இந்த நிகழ்வில், முதியோர்களும் இல்ல நிர்வாகத்தினரும் பொதுமக்களும் பங்கேற்று பக்தியுடன் வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

வைகாசி விசாகம் என்பது சுவாமி முருகப்பெருமான் அவதரித்த புனித நாளாகும். இந்த நாள் ஸ்ரீ முருகப்பெருமானுக்கு சிறப்பு அபி‘ேகமும் ஆராதனையும் செய்யப்படுகிறது. அதேபோல், சிவபூமி முதியோர் இல்ல ஸ்தாபகர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களின் ஜென்ம நட்சத்திரமும் வைகாசி விசாகமே என்பதால், அவரின் நலனுக்காகவும் நீண்ட ஆயுளுக்காகவும் வைகாசி விசாகம் அன்று சிறப்பு பூஜை நடைபெற்றது. முதியோர்கள், இல்ல உத்தியோகத்தர்களுடன் ஆன்மீகச் சுடர் ரிஷி. தொண்டுநாத சுவாமிகளும் கலந்து கொண்டு பூசை அனுட்டானங்களை மேற்கொண்டார்.

இந்நிகழ்வில் பங்கேற்ற அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. முதியோர் மகிழ்ச்சியுடன் சுவாமி முருகனிடம் தங்கள் பிரார்த்தனைகளைச் செய்தனர்.











# பாவம் நெருப்பைப் போன்றது



குருக்ஷேக்ஷேத்திர யுத்தம் முடிந்தது. கௌரவர்கள் பூண்டோடு அழிந்தனர். பகவான் கிருஷ்ணரின் உதவியால் பாண்டவர்கள் வெற்றி பெற்றனர். அவரது வழிகாட்டுதலுடனும் கருத்தொருமித்த சகோதரர்களின் ஒற்றுமையாலும் அஸ்தினாபுரத்தின் சக்ரவர்த்தியாக முடிசூட்டப்பட்டார் தருமபுத்திரர்.

இதையடுத்து பகவான் கிருஷ்ணரின் தலைமையில், சகோதரர்கள் புடைசூழ, தனது பெரிய தகப்பனாரான திருதராஷ்டிரரிடம் ஆசி பெற வந்தார் தருமர். துர்க்குணம் கொண்ட துரியோதனன் முதலான கௌரவர்களுக்குத் தந்தையாக இருந்தாலும் திருதராஷ்டிரர் இயல்பிலேயே நற்குணம் மிக்கவர். தன் சகோதரனான பாண்டுவின் மைந்தர்களிடம் அன்பும் பாசமும் கொண்டவர்.

பாண்டவர்களுக்காகத் தன் மகன்களிடம் அவர் பலமுறை பரிந்து பேசியும் பலன் இல்லை. விளைவு யுத்தம்! அதில், மகன்கள் அனைவரையும் பறி கொடுத்த துக்கத்தில் ஆழ்ந்திருந்தார் திருதராஷ்டிரர். இந்த நிலையில்தான் அவரைச் சந்திக்க வந்தனர் பாண்டவர்கள். தம்மை வணங்கி நிற்கும் கிருஷ்ணரையும் பாண்டவர்களையும் கண்ட திருதராஷ்டிரர் துக்கம் தாளாமல் கதறி அழுதார்.

பகவான் கிருஷ்ணரும் தருமரும் நீதிநெறிகளை எடுத்துச் சொல்லி அவரைத் தேற்றினர். சற்று ஆறுதல் பெற்ற திருதராஷ்டிரர், கிருஷ்ணா! நீயே பரம புருஷன். இந்த உலகில் நடக்கும் அனைத்து செயல்களுக்கும் நீயே காரணமானவன். உனையன்றி ஓர் அணுவும் அசைவதில்லை. துரோணர், பீஷ்மர் முதலான பெரியோர்களது

ஆலோசனைப்படி நல்லாட்சி செய்ததால், என் தேசத்து மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர். சிறந்த அரசன் என்று பெயர் பெற்ற எனக்கு, இவ்வளவு பெரிய துன்பம் எதனால் ஏற்பட்டது? என்று துக்கத்துடன் கேட்டார்.

உடனே, சக்ரவர்த்தியே, வேறு விஷயங்களைப் பேசி, துக்கத்தைக் கொஞ்சம் மறக்கலாமே! என்ற கிருஷ்ண பரமாத்மா தன் பேச்சைத் தொடர்ந்தார்: பாண்டுவின் மைந்தரான தரும புத்திரர் அரச பொறுப்பு ஏற்றுள்ள இந்த தருணத்தில், அரச நீதி குறித்து எங்களுக்கு ஒரு சந்தேகம். அதை, தாங்கள்தான் களைய வேண்டும்! என்றார் கிருஷ்ணர். அப்படி என்ன சந்தேகம் பரந்தாமா?- திருதராஷ்டிரர் கேட்டார்.

ஒரு கதை சொல்கிறேன். அதிலேயே எங்களது சந்தேகமும் அடங்கி இருக்கிறது. என்ற கிருஷ்ணர், கதையை விவரித்தார்: அந்த அரசன், மிக நல்லவன். நீதி-நெறி பிறழாமல் ஆட்சி புரிந்து வந்தான். சைவ நெறிப்படி வாழ்ந்தவன். ஆனால், அரண்மனையில் உணவு தயாரிக்கும் சமையற்காரனோ அசைவப் பிரியன்! அசைவம் தயாரிப்பதில் கைதேர்ந்தவன். அவன் சமைக்கும் உணவைச் சாப்பிட்டுப் பார்க்கும் ஒருவருக்கு அது சைவமா, அசைவமா என்று கண்டறிய முடியாது. இந்த ஆசாமிக்கு ஒரு விபரீதமான-கொடூரமான ஆசை வந்து விட்டது. அதாவது, அசைவ உணவை சைவம் போல் தயாரித்துக் கொடுத்து அரசனைச் சாப்பிட வைக்க வேண்டும் என்பதுதான் அந்த ஆசை.

அரசன், தனது அரண்மனையில் சாதுவான மிருகங்களையும் பல அதிசயப் பறவைகளையும் வளர்த்து வந்தான். அவற்றில் ஓர் அன்னப் பறவையும் உண்டு. அது, தினமும் முட்டையிட்டுக் குஞ்சுகள் பொறித்து வந்தது. ஒரு நாள், இந்த அன்னப் பறவையின் குஞ்சு ஒன்றைப் பிடித்து வந்த சமையற்காரன், அசைவ உணவு என்று அறிய முடியாதபடி பக்குவமாகச் சமைத்து மன்னனுக்குப் பரிமாறினான்.

அது, அசைவ உணவு என்பதை அறியாத மன்னனும் அடடா பிரமாதம்! என்றபடி ரசித்து, ருசித்து, இன்னும் கேட்டுச் சாப்பிட்டான். இதைக் கண்ட சமையற்காரன் மகிழ்ந்தான். அரசரையே ஏமாற்ற வைக்கும் தன் திறமையை எண்ணி வியந்தான். இதே போல் தினமும் அசைவ உணவு தயாரித்து மன்னனுக்குப் பரிமாறினான். சமையலில் அவனது கைப்பக்குவத்தைப் பாராட்டிய மன்னன்,

ஏராளமான பரிசு வழங்கி கௌரவித்தான்!
கதையைக் கூறி முடித்த கிருஷ்ணர், சக்ரவர்த்தியே, எங்களது சந்தேகம் இதுதான்! மன்னனை ஏமாற்றி, புலால் உணவு சாப்பிடச் செய்த சமையற்காரன் குற்றவாளியா? அல்லது அசைவம் என்று அறியாமல் புலால் உணவு சாப்பிட்ட மன்னன் குற்றவாளியா? இருவரில் தண்டனைக்குரியவர் யார்? என்று கேட்டார். திருதராஷ்டிரர் பதில் கூறினார்:

கண்ணா, சர்வ வியாபியான உனக்குத் தெரியாத நீதியா? குருக்ஷேத்திரத்தில் அர்ஜுனனுக்கு பரிபூரணமான நீதிநெறிகளை (கீதையை) உபதேசித்த நீ, என்னிடம் விளக்கம் கேட்கிறாயே சரி, எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன்! சமையற்காரன் செய்தது பெரிய குற்றமல்ல. வேலைக்காரர்கள், நேர்மையாகவோ அல்லது ஏமாற்றியோ தங்கள் எஜமானனை திருப்தியடையச் செய்து, பரிசுகள் பெறுவது உலக இயல்பு. ஆகவே, அவன் செய்தது சிறிய குற்றமே. ஆனால், மன்னனின் நிலை அப்படியல்ல. அவன், தன்னைச் சுற்றி நடக்கும் விஷயங்களை மிக நுட்பமாக கிரகிக்க வேண்டும்.

தன் பணியாளர்களது செயல்களைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். தவறினால், எதிரிகளது சூழ்ச்சியால் நாட்டையும் ஏன், தன் உயிரையே கூட இழக்க நேரிடும். கிருஷ்ணா! கதையில் நீ குறிப்பிட்ட மன்னன் தனது கடமையைச் சரியாகச் செய்யவில்லை. ஆக, அவன் கடமை தவறியது முதல் குற்றம். சமையற்காரன் ஒருவனிடம் ஏமாந்தது இரண்டாவது குற்றம். புலால் உண்டது மூன்றாவது குற்றம். இவற்றை அவன் அறிந்து செய்யவில்லை என்றாலும் அவனே குற்றவாளி. மேலும், பறவையின் கொலையில் மன்னனுக்கு மறைமுகத் தொடர்பு உள்ளதால், அவனே அதிக குற்றங்களைச் செய்தவன் ஆகிறான். எனவே, மன்னனுக்கே தண்டனை வழங்க வேண்டும் என்றார் திருதராஷ்டிரர்.

இதைக் கேட்டுப் புன்னகைத்த கிருஷ்ணர், சக்ரவர்த்தி! தங்களிடம் நான் சொன்னது கதையல்ல் உண்மைச் சம்பவம். இந்தக் கதையின் நாயகன் தாங்களே. முற்பிறவியில் செய்த தான- தர்மத்தின் பலனால், இந்தப் பிறவியில் நல்ல மனைவி, நல்ல மந்திரிகள், வளமான நாடு, நிறைய சந்ததிகள் என்று சகலமும் வாய்க்கப் பெற்றீர்கள். இதேபோல், பாவத்தின் விளைவால் இப்போது, புத்திர சோகத்தில் தவிக்கிறீர்கள்.

சமையற்காரன் செய்த உயிர்க் கொலை, தாங்கள் அறியாமல் நடந்தது என்றாலும், அவன் சமைத்த புலால் உணவைச் சாப்பிட்டதால், கொலை செய்த பாவம் தங்களையும் ஒட்டிக் கொண்டது. மன்னனே குற்றவாளி அவனுக்கே தண்டனை என்ற நியாயத்தை தாங்களே சொல்ல வேண்டும் என்று விரும்பினேன். பாவம் நெருப்பைப் போன்றது! நாம் அறியாமல் தொட்டாலும் நெருப்பு நம்மைச் சுட்டு விடும்.

அதே போல் அறியாமல் பாவம் செய்தாலும், அதற்கான தண்டனையை அனுபவித்தே ஆக வேண்டும். நீங்களும் முற்பிறவியில் செய்த பாவத்தின் பலனாகவே, இப்போது புத்திரர்களை இழந்து தண்டனையை அனுபவிக்கிறீர்கள் என்று முடித்தார் பகவான் கிருஷ்ணர். திருதராஷ்டிரர், தருமர் மற்றும் உடன் இருந்த அனைவரும் அதிர்ச்சியால் வாயடைத்துப் போயினர்.

அறியாமல் பாவம் செய்தாலும், அதற்கான தண்டனையை அனுபவித்தே ஆக வேண்டும். அறிந்து செய்யவில்லை என்றாலும் அவனே குற்றவாளி ஆகிறான்!



# கனடா ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களின் சிறப்பு ஆன்மீக உரை




பல்வேறு ஆன்மீக மற்றும் கலாசார நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக கனடா விஜயம் மேற்கொண்டுள்ள புகழ்பெற்ற ஆன்மீக பேச்சாளரும் எமது நிர்வாக சபைத் தலைவருமான கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்கள், கனடாவின் ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு நிகழ்வில் தனது ஆன்மீக உரையை வழங்கினார்.

இந்த நிகழ்வில் பெருமளவான பக்தர்கள் கலந்து கொண்டு ஆனந்த அனுபவத்தைப் பெற்றனர். நிகழ்வு தொடக்கம் முதலே பக்தியால் நிரம்பிய சூழ்நிலை காணப்பட்டது. இவ்வாறான நிகழ்வுகள் வெளிநாட்டில் வாழும் தமிழரின் ஆன்மீக அடையாளமாகவும், கலாசார மூலதனமாகவும் திகழ்கின்றன என்பது உறுதி. மேலும் இந்நிகழ்வை ஒழுங்குபடுத்திய அனைவருக்கும் பக்தர்கள் நன்றியைத் தெரிவித்தனர்.














இந்தப் பத்திரிகை சிவபூமி அறக்கட்டளையால் வெளியிடப்பட்டுள்ளது.(ஆனி-2025) ISBN-978-955-7420-00-4